

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 4 ஏப்ரல் - 2005

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**


தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........................ 1
2. வாரத்தின் முதல் நாளில் நாமேன் கூடி வருகிறோம். ........................ 10
3. பெண்கள் பகுதி ........................ 15
4. வாலிபர் பகுதி ........................ 19
5. சிறுவர் பகுதி ........................ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........................ 25
7. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் 31

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 18 APRIL - 2005 Issue - 4**


ஆசிரியர் உரை

## "தன்னால் இயன்றதைச் செய்தாள்"

**நா**ம் எல்லாரும் நம்முடைய வாழ்க்கையில் அவரவர் திர்ாணிக்குத் தக்கதாக, எதையாகிலும் அவ்வப்போது பிறருக்கு செய்கிறவர்களாக இருப்போம். அப்படிச் செய்யும்போது எல்லோருக்கும் ஒரே விதமாகச் செய்து விடுவதில்லை. நாம் ஒருவருக்கு என்ன செய்கிறோம், எவ்வளவு செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்பதையெல்லாம் அடிப்படையாக வைத்து, நாம் சம்பந்தப்பட்டவரை எந்தளவு நேசிக்கிறோம் அல்லது மதிக்கிறோம் என்பதைச் சொல்லிவிட முடியும். ஒருவேளை, நாம் என்னதான் செய்தாலும், சம்பந்தப்பட்டவர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்கிறார்களென்பதும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. ஏனெனில், சில வேளைகளில், அவர்கள் அப்படி என்ன செய்தார்கள், ஒப்புக்குத் தானே செய்தார்கள், கடனைக் கழிக்கத்தானே செய்தார்கள், செய்ததைத்தானே திருப்பிச் செய்தார்களென்று சொல்லிவிடவும் வ்ாய்ப்புண்டு.

ஆனால், ஒரு சில சமயங்களில் மாத்திரம், அடப் பரவாயில்லையே நன்றாகச் செய்தார்கள் அல்லது சிறப்பாகக் கவனித்தார்கள் என்று கூறுவார்கள். ஆயினும், நாம் எப்படித்தான் விழுந்து, விழுந்து கவனித்தாலும், ஆஹா, இவர்கள் **தங்களால் இயன்றவரை** எங்களை சிறப்பாகக் கவனித்தார்களென்று பெரும்பாலும் யாரும் சொல்லுவதில்லை. ஏதோ ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாமோ என்னமோ தெரியவில்லை. அந்த விதிவிலக்குகளும் கூட யதார்த்தமாகச் சொல்லப்பட்டவைகளா என்ற கேள்வி அங்கே இருக்கும் ! நான் சொல்லுவது ஓரளவுக்காகிலும் சரி தானே.

ஆனால், சத்திய வார்த்தைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில், ஓர் ஒதுக்குப்புறமான கிராமத்தில் வாழ்ந்த ஓர் யூதப் பெண்ணைப்பற்றி ... **"தன்னால் இயன்றதைச் செய்தாள்"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? ஒன்றையும் மிகைப்படுத்திப் பேசிப் பழக்கமில்லாத, ஒரு போதும் பொய்யுரையாத நம் இயேசு ஆண்டவர். அப்படிச் சொல்லியிருப்பதற்குக் கண்டிப்பாகப் போதுமான காரண காரியங்கள் இருக்க வேண்டும். ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக ஒன்றைச் சொல்லிவிடமாட்டார் அவர். அப்படித்தானே ! அவர் ஏன் அப்படிச் சொன்னார், எந்தச் சூழ்நிலையில் இக்கருத்தை வெளிப்படுத்தினார் என்பதையும், அதன் மூலமாக நமக்கு என்ன பாடம் கிடைக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின் படியாக இதன் பின்னணியைப் பார்த்து விடுவோம்.

**"தன்னால் இயன்றதைச் செய்தாள்"** என்ற கூற்று, இயேசுவின் பூலோக வாழ்க்கை முடிய இன்னும் ஒரு வார காலமே எஞ்சியிருந்த நிலையில், ஒரு விருந்தின் போது சொல்லப்பட்டுள்ளது. லூக்கா தவிர மற்ற மூன்று நற்செய்தியாளர்களும், இச்சம்பவம் பற்றி எழுதிக் கொடுத்துள்ளனர். (மத் 26:6-13, மாற். 14:1-9, யோவா 12:1-8)

அந்த விருந்து நடந்த கிராமத்தின் பெயர் பெத்தானியா. இக்கிராமம் எருசலேமிலிருந்து எரிகோவிற்குப் போகும் வழியில், ஒலிவ மலைக்கு அப்புறத்தில் சுமார் 2 மைல் தொலைவிலிருந்தது. மார்த்தாள், மரியாள், லாசரு போன்றவர்களுக்கு சொந்தமான இக்கிராமம், இயேசுவின் பாதம் படியும் பாக்கியம் பெற்ற கிராமங்களுள் பிரதானமானது. போஜன பந்தியிருந்த வீடோ குஷ்டரோகியாயிருந்த சீமோனுடையது. இன்றளவும் மருத்துவ விஞ்ஞானத்திற்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் கடும் வியாதியாகிய குஷ்டத்திலிருந்து விடுபட்டதற்கு நன்றிக்கடனாக இந்த விருந்தை அவன் ஏற்பாடு செய்தானோ என்னவோ நமக்குத் தெரியாது. இந்த சீமோன், மார்த்தாள், மரியாள், லாசரு ஆகிய இவர்களின் அண்டை வீட்டுக்காரனாகவோ அல்லது இவர்களுக்கு மிகவும் நெருக்கமானவனாகவோ இருந்திருக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், அந்த விருந்தில், "மார்த்தாள் பணிவிடை செய்தாள்" என்று பார்க்கிறோம். (யோவா. 12:2) அப்படியானால், வேறொரு வீட்டில், பரிமாறும் வேலையை குடும்பத்திற்குப் பழக்கமில்லாதவர்கள் பெரும்பாலும் செய்யமாட்டார்கள். அப்படித்தானே !

சரி, இந்த விருந்தின் போது தான், பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் அடக்கத்திற்கு அடைக்கலம் கொடுத்து வாழ்ந்தவளும், தேவ பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவளுமான மரியாள், **உலகம் உள்ளளவும் பேசப்படும்** என்று இயேசுவால் சொல்லப்பட்ட ஒரு காரியத்தைச் செய்தாள். ஆம், இயேசுவும், அவரோடு வந்திருந்த மற்றவர்களும் சற்றும் எதிர்பாராத விதமாக, விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள

வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள். (மத் 26:7, மாற். 14:3) இதே சம்பவத்தை யோவான் நற்செய்தியாளர், இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவா 12:3) என்று கூறுகிறார். இரண்டுமே உண்மை தான். எப்படியோ உச்சி முதல் பாதம் வரை விலையுயர்ந்த தைலம். அதன் விளைவாக வீடு முழுவதும் நறுமணம்.

மரியாள் ஆவியிலும், சரீரத்திலும் இயேசுவிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியாக எதையாகிலும் செய்தே ஆகவேண்டுமென்று எண்ணித் தீர்மானித்து, செய்த இக்காரியம், விருந்துக்கு வந்திருந்த மற்றவர்களால் பார்க்க வேண்டிய கோணத்தில் பார்க்கப்படவில்லை. மரியாளின் செய்கை வீணானது என்றும், புத்தியீனமானது என்றும் கருதப்பட்டது. (மாற் 14:4). இப்படித் தங்களுக்குள் எண்ணியது மாத்திரமல்ல, இதை 300 பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி தங்கள் மேதாவித்தனத்தைக் காட்டியதும் போதாதென்று , முணுமுணுக்கவும் செய்தனர் (14:5). சில நேரங்களில், ஏன், பல நேரங்களில், தேவகாரியமாக நாம் செயல்படும்போது, அதுவும் ஒரு திட்டத்தோடும், தீர்மானத்தோடும் செயல்படும்போது, இப்படித்தான் சில அதி மேதாவிகள் விதவிதமான விமர்சனங்களை வீசி எறிவார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் உங்களில் அநேகருக்கு இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆனால், காரியங்களை கனகச்சிதமாகக் கவனித்து, உள்ளத்தை நிறுத்துப் பார்க்கும் இயேசுவோ, அவர்களை நோக்கி அவளை விட்டு விடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்று சொல்லி அவர்களின் முணுமுணுப்பை முடமாக்கியதோடு, **என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள்** என்று ஒரு போடு போட்டார். அதோடு, கப் சிப் (14:6) எல்லாம் வல்ல, சகல ஞானமும் கொண்ட இயேசுவால், நற்கிரியை என்று பாராட்டப்பட்ட ஒரு செயல், இந்த ஞான சூன்யங்களுக்கு துர்க்கிரியையாகப் பார்க்கப்பட்டு கடுமையாக விமர்சிக்கப் பட்டிருக்கிறது. ஒரு காரியத்தை இயேசு பார்க்கும் விதத்திற்கும், அவரோடிருந்தவர்கள் பார்த்த விதத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்களே! உலக ஞானம் தேவகாரியங்களைப் புரிந்து கொள்ளப் போதுமானதல்ல என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

இப்படி அவர்களின் வாயை அடைத்துவிட்டுத் தொடர்ந்து பேசும்போது தான் நம் ஆண்டவர், **இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்** என்று புகழ்மாலை சூட்டினார். அவள் செய்த காரியத்தின் உண்மையை முழுமையாகப் புரிந்தவராகவே இக்கருத்தை வெளியிட்டார்.

அவளை இப்படிப் பாராட்டியதோடு நிற்காமல் இன்னும் ஒருபடி மேலே சென்று, **இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்றார் (14:9) இதற்கு மேலான ஒரு பாராட்டு யார் பெற முடியும்? இதை விடப் பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்?

சரி, நம்முடைய இரட்சகர் இயேசுவின் புகழுரைக்கும், மெச்சுதலுக்கும் இவள் தன் செயலால் தகுதி பெற்றுள்ளபடியால், அச்செயலில் அடங்கியுள்ள நற்காரியங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I மரியாள், ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்துச் செயல்பட்டாள்

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவள் இயேசுவுக்கு நன்றியாக எதையாகிலும் சிறப்பாக செய்ய வேண்டுமென்று தீர்மானித்துச் செய்துள்ளாள் என்பது.

நன்றி என்பது ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். தேவனையும், அவருடைய குமாரனையும் நேசிக்கிறவர்கள், அவர் மூலமாக நன்மை பெறுகிறவர்கள் அதற்கு நன்றியாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறார்கள். பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கி, அவர்களில் ஒருவன் மாத்திரம் நன்றி சொல்லத் திரும்பி வந்தபோது, குணமாக்கப்பட்டவர்கள் பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (லூக்.17:12-18) இயேசுவால் இப்படி எதிர்பார்க்கப்படும் நன்றிக்கு இவள் பாத்திரமுள்ளவளாக இருந்துள்ளாள்.

அப்படி என்ன இவள் இயேசுவிடம் நன்மை பெற்றாள் நன்றியைக் காட்டுவதற்கு என்கிறீர்களா? அவள் பெற்ற எல்லா நன்மைகளும் எனக்குத் தெரியாது. ஆனால், ஆவியிலும், சரீரத்திலும் அவள் பெற்ற நன்மைகளுக்கு ஆதாரமாக இரண்டு காரியங்களைச் சொல்லுகிறேன் கவனியுங்கள். முதலாவது, ஒரு சமயம், இயேசு அவர்களுடைய வீட்டிற்குச் சென்றபோது, மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த மார்த்தாள், தனக்கு உதவி செய்யாமல், இப்படி உமது பாதத்தண்டை அமர்ந்து நேரத்தை வீணடிக்கிறாளே என்று குமுறினபோது, இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக; மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் என்று சொன்னதோடு, **தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்** என்றார். ஆம், அவர் பாதத்தருகே அமர்ந்து, அவர் வாயின் வார்த்தைகளைக் கேட்டதன் மூலம் தன்னை விட்டெடுபடாத ஆவிக்குரிய நன்மையைப் பெற்றுக்கொண்டாள். அடுத்து,

லாசரு மரித்த போது, மரியாளின் கண்ணீரைக் கண்ட பிறகே, ஆவியில் கலங்கித் துயரமடைந்து, அவனை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டதோடு, கண்ணீரும் விட்டார். தொடர்ந்து கல்லை எடுத்துப் போடுங்கள் என்று சொல்லி, **அவனை உயிரோடே எழுப்பினார்** (யோவான் 11:33-45). இதை, அவள் இயேசுவினிடம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

அருமையானவர்களே, இந்த மரியாள், இப்படி ஆவியிலும், சரீரத்திலும் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி காட்ட வேண்டுமென நினைத்துள்ளாளே, நமக்கெல்லாம் அப்படி நினைப்பு வருவதில்லையா? நன்றி காட்டும் அளவுக்கு நாம் அவரிடத்தில் எதுவும் பெற்றுக்கொள்ள வில்லையா? அல்லது நன்றிக்கு நமதாண்டவர் பாத்திரராகத் தான் இல்லையா? பின்னே, என்ன தான் காரணம்?

ஒருவேளை, அவர் எனக்கு எந்த நன்மையும் செய்யவில்லை, நானாக என் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்கிறீர்களா? இப்படி எண்ணுவதை இதோடு நிறுத்துங்கள். சரீரப்பிரகாரமாக, அவரில்லாமல் நாம் இந்தப் பூமியில் வாழ்வதில்லை. ஆவியின் ரீதியிலும், மரியாளைக் காட்டிலும் அதிக நன்மைகளை நாம் பெற்றிருக்கிறோம். எப்படியெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் என்று பவுல் ரோமாபுரியாருக்குச் சொல்லும் போது கூறுகிறார் (அப் 17:28) அடுத்து, மரியாள் எண்ணெய் பூசின போது, **இயேசு அவளுக்காக மரிக்கவில்லை, இயேசு அவளுக்காக இரத்தம் சிந்தவில்லை.** ஆனால், நமக்கோ அந்த ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. பவுல் அப்போஸ்தலன், எபேசியருக்குக் கூறும்போது, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்தார் என்கிறார் (எபே 5:2) இதைவிட இயேசு நமக்காக என்ன செய்ய வேண்டும்?

இயேசுவின், சிலுவை மரணத்தின் நன்மையை, இரட்சிப்பின் வல்லமையை அனுபவிக்காத அவளே, இயேசுவுக்குத் தன்னால் இயன்றதைச் செய்திருக்கும் போது, நாமெல்லாம் அவருக்கு எந்தளவு நன்றியோடு காரியமாற்ற வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள். ஆனால், அப்படி செய்கிறோமா? இன்னும், நாம் நம்முடைய வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுக்காதவர்களாயிருந்தால், உடனடியாக நம்மை ஒப்புக்கொடுத்து, நன்றி செலுத்துவோம் !

## II மரியாள், தடைகள் வந்த போதும் பொருட்படுத்தாமல் செயல்பட்டாள்

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், தன் தீர்மானத்திற்குத் தடைகள் வந்தபோதும் துவண்டு போகாமல் செயல்பட்டாள் என்பது.

ஒன்றைச் செய்ய தீர்மானித்து ஆரம்பிப்பதும், பிறகு ஏதாவது சோதனைகளோ, தடைகளோ வரும் போது எடுத்த முடிவிலிருந்து லேசாகப் பின்வாங்குவது அவ்வப்போது நம் வாழ்க்கையில் நடப்பவை தான். சரீரப் பிரகாரமாகவும் இது உண்மை. ஆவிக்குரிய ரீதியிலும் இதுதான் உண்மை. ஆனால், இந்த மரியாளோ சற்று வேறுபட்டவளாக இருந்துள்ளாள்.

ஆம், இயேசுவின் சிரசில் தைலம் ஊற்றியபொழுது, இயேசு வோடிருந்த சீடர்கள், அவளுக்கு எதிராக முணுமுணுத்ததோடு நிற்காமல், அவள் காதில் விழத்தக்க அளவில் வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்கள். (மாற்கு 14:5) இயேசு அங்கே இருந்ததால், ஓர் அதிகார தோரணையில் அவளை விரட்ட முடியவில்லை. அதற்காக அவர்கள் மவுனம் காத்துவிடவும் இல்லை. அவள் செயலைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு, சில ஊமை முயற்சிகளை எடுத்துள்ளதாகவே தெரிகிறது. எப்படியெனில், **இயேசு அவர்களை நோக்கி, அவளை விட்டு விடுங்கள்; ஏன் அவளைத் தொந்திரவு படுத்துகிறீர்கள்?** என்று சொல்ல வேண்டியதாயிற்று ! (14:6)

அருமையானவர்களே, இன்றைக்கு நம்முடைய நிலை, இந்த மரியாளோடு ஒப்பிடும் போது எப்படியுள்ளது? இயேசுவுக்காக, இயேசுவின் காரியமாக நாம் செயல்படத் தீர்மானித்துக் காரியமாற்றும் போது, எதிர்வரும் தடைகளை நாம் எப்படிச் சந்திக்கிறோம்? கண்டிப்பாக, நாம் இயேசுவின் காரியமாகச் செயல்பட ஆரம்பிக்கும் போது சோதனைகள் வரும். இதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை. எப்படியெனில், நமது ஆண்டவர் தேவ சித்தத்தை நிறைவேற்ற ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவுடன் சோதனைக்காரனாலே சோதனை வந்தது. அப்படித்தானே! (மத். 4 அதி) இன்னும், அப்போஸ்தலன் பவுல், தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று தானே கூறியுள்ளார்? (II தீமோ 3:12)

நம்முடைய வாழ்க்கையிலும், நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ முற்படும் போது சோதனைகள், தடைகள் வந்து சேரும். மரியாளுக்கு சீடர்களிடமிருந்து, அதாவது, இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதின்படி வாழ்கிறவர்கள் என்று கருதப்பட்ட சீடர்களிடமிருந்து வந்தது போல, நமக்கும் கூட நாம் யாரைப் பக்திமான்களென்று எண்ணுகிறோமோ, யாருக்கு வேதாகமம் அதிகம் தெரியும் என்று நம்புகிறோமோ, யார் ஆவிக்குரிய காரியங்களில் ஏமாற்ற மாட்டார்களென்று நினைக்கிறோமோ அவர்களிடமிருந்து வந்து சேரும். இயேசுவின் காரியமாக நாம் சத்திய வார்த்தைகளின் உபதேசத்தின்படி நடக்க முயற்சிக்கும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு பக்தியுள்ள பெண்மணி என்றளவில் மரியாள், சீடர்களை மதித்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம், அவள் இயேசுவின் காரியமாகச் செய்யத் தீர்மானித்த காரியத்திற்கு அவர்கள் தடையேற்படுத்தினபோது அவர்களைச் சற்றேனும் பொருட் படுத்தவேயில்லை.

மரியாதை என்பது வேறு, ஆத்துமாவை அடகு வைப்பது வேறு. இன்றைக்கு மரியாதை என்ற பெயரில் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளும் அநேகர் தங்கள் குருமார்களிடமும், பாஸ்டர்களிடமும், அற்புதம் என்ற பெயரில் ஊரை ஏமாற்றும் ஊழியர்களிடமும், வரம் பெற்றவர் களென்று வாய்ப்பந்தல் போடும் மனிதர்களிடமும் ஆத்துமாக்களை அடகு வைக்கிறார்கள். இவர்களெல்லாம் மரியாளிடமிருந்து பாடம் கற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி, உண்மைச் சத்தியத்தை அறிந்து, வேத வசனங்களின்படி விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்து வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய்ச்சபையில் அங்கமாகி வாழ வேண்டும். இக்காரியத்தில், மரியாளைப் பின்பற்ற நீங்கள தயாரா?

## III மரியாள் செய்ய வேண்டிய சமயத்தில் செயல்பட்டாள்

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், இயேசுவுக்குத் தான் செய்ய வேண்டுமென விரும்பியதைச் செய்ய வேண்டிய தருணத்தில் செய்தாள் என்பது.

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் என்று (நீதி 25:11) ஞானி கூறுகிறார். அதாவது, சரியான நேரத்தில் சொல்ல வேண்டிய ஒன்றைச் சொல்லுவது மிகவும் சிறப்பானது என்பதே இதன் பொருள். ஏற்ற சமயத்தில் சொல்லும் சொல்லுக்கு இக்கருத்து எப்படிப் பொருந்துகிறதோ, அது போலவே செய்யும் செயலுக்கும் இது பொருந்தும். ஞானியினுடைய இந்தப் பொன்னான வார்த்தைகளுக்கு, தன்னுடைய நற்கிரியையின் மூலம் வடிவம் கொடுத்திருக்கிறாள் நமது மரியாள்.

மரியாள், இயேசுவின் தலையின் மீது தைலத்தை ஊற்றின போது, அவருடைய பூலோக வாழ்க்கை முடிய இன்னும் ஒரு வார காலமே இருந்தது. கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டு காலம் அவரைப் பற்றி அறிந்து, ஆவியிலும், சரீரத்திலும் நன்மை பெற்று வாழ்ந்த மரியாள், அவைகளுக்கு நன்றி செலுத்த **இன்னும் ஒருவாரம் தாமதித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?** கண்டிப்பாக இயேசுவுக்கு ஒன்றும் ஆகியிருக்காது. ஆனால், மரியாளுக்கு? என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் என்ற பாராட்டும், உலகம் உள்ளளவும் பேசப்படுவாள் என்ற பாக்கியமும் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள். நிச்சயமாகக் கிடைத்திருக்காது.

அருமையானவர்களே, இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? இயேசுவின் காரியமாக நாம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும். செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல், நித்திய அழிவுக்குத் தங்களைச் சொந்தமாக்கின சில மனிதர்களை நாம் வேதத்தில் பார்க்க முடியும். ஒருவன், ஆளுநர் பேலிக்ஸ் மற்றொருவன் அகிரிப்பா ராஜா. பவுல், நீதியையும், இச்சையடக்கத்தையும்,

இனிவரும் நியாயத் தீர்ப்பையுங்குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; **இப்பொழுது நீ போகலாம். எனக்கு சமயமானபோது, உன்னை அழைப்பிப்பேன் என்றான்.** (அப் 24:25) இந்தப் **பெரிய மனிதனுக்கு மீண்டும் சமயம் கிடைத்ததாக வேதாகமத்தில் எங்குமே காணோம்.** ஆளுநருக்குத் தான் இந்தக்கதி என்றால், அகிரிப்பா ராஜாவின் நிலை அதற்கு மேல். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி : **நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்** என்றான். (அப் 26:25) கொஞ்சங்குறையக் கிட்டவந்த ராஜாவும், கிறிஸ்தவனாக மாறினான் என்று எந்த தடையமும் நமக்கு வசனங்களில் இல்லை.

அப்படியானால், இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? இயேசுவின் காரியமாக **உடனடியாக செயல்பட வேண்டுமென்றுதானே கூறுகிறது.** இதை அப்போஸ்தலன் பவுல் இரண்டாவதாக கொரிந்தியருக்கு சொல்லும் போது "... இதோ, இப்பொழுதே, அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" என்று கூறியுள்ளார். (6:2) இரட்சிப்பு எவ்வளவு அவசரமான ஒன்றாக சொல்லப்படுகிறதென்று பாருங்கள். அப்படியென்ன இரட்சிப்புக்கு அவசரம், ஏன் அதை தள்ளிப்போடக்கூடாது என்று கேட்கிறீர்களா? அப்படித்தானே. தள்ளிப்போடக்கூடாது என்பதற்கு இரண்டு பெரும் காரணங்கள் உண்டு. ஒன்று, இயேசுவின் வருகை எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம். (மத். 25:13) இரண்டாவது, நம்முடைய ஜீவனுக்கு எந்த உத்திரவாதமும் இல்லை என்று வேத வசனங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறது. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமல் போகிற புகையைப் போலிருக்கிறதே என்று (யாக் 4:14)

மரியாள், இயேசுவின் காரியமாகச் **செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்தபடியால் தான்** என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் என்ற பாராட்டும், உலகம் உள்ளளவும் பேசப்படும் பாக்கியமும் கிடைத்தது. இந்த மரியாள் போல, நாமும் இயேசுவின் காரியமாக, குறிப்பாக, இரட்சிப்பு மற்றும் சபை காரியங்களில் வேத வாக்கியங்களின்படி செய்ய வேண்டியதைச் செய்வோமானால், வாருங்கள், என் பிதாவியினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே (மத் 25:34) என்ற பாராட்டும், உலகம் உள்ளளவும் என்ன, நித்திய காலமெல்லாம் அவரோடு கூட இருக்கும் பாக்கியமும் கிடைக்கும் (மத் 25:34, 46)

இந்தப் பாராட்டும், நித்திய பாக்கியமும் உங்களுக்கு கிடைக்க வேண்டுமானால், நமது மரியாளைப் போல, இயேசுவின் காரியமாக நன்றியுடையவர்களாயிருந்து, தடைகளைப் பற்றிக் கவலைப்படாமல், செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

**ஏலகிரி மலையில் உங்களை சந்திக்க விரும்புகிறேன்**
**குடும்பமாகவும், சபையாகவும் வாருங்கள்.**

**EZS. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# எட்டாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 2, 3, 4 - 2005 (திங், செவ், புதன்)

## சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான சந்தர்ப்பம்.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் தலைசிறந்த ஊழியர்கள்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை.
- பெண்களுக்கு தனி இடவசதி.

உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **80 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# வாரத்தின் முதல் நாளில் நாமேன் கூடி வருகிறோம்

கர்த்தருடைய சபையின் அங்கமாக இருக்கும் கிறிஸ்தவன், தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டுமென்று வேதம் நமக்கு போதிக்கிறது (யோவான் 4:24) இதன் பொருள் யாதெனில், ஆராதனை செய்கிற நாம் என்ன செய்கிறோம் என்பதை புரிந்தும், உள்ள சுத்தியோடும், கர்த்தருடைய வார்த்தையை அடிப்படையாக கொண்டும் அதைச் செய்ய வேண்டும் என்பதாகும். கேள்வி என்னவென்றால், அதை நாம் எப்பொழுது? எத்தனை நாளைக்கு ஒரு முறை செய்ய வேண்டும்? அது வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையில் இருக்க வேண்டுமா? அல்லது வாரத்தின் வேறு எந்த ஒரு நாளிலாவது இருக்க வேண்டுமா? நாம் ஆராதனைக்கென்று கூடி வருவது மாத்திரம் போதுமா?

பழைய ஏற்பாட்டை நாம் வாசிக்கையில், தேவன் தனது ஜனமாகிய இஸ்ரவேல் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும், அதை கடைபிடிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். அது பத்து கட்டளைகளில் ஒன்றாக இருந்தது. (யாத் 29:8-11) ஆனால், நாம் கிறிஸ்துவின் காலத்திற்கு வரும்போது, கிறிஸ்து பழைய பிரமாணத்தை அல்லது ஓய்வு நாளை கர்த்தருடைய ஜனங்கள் அனுசரிக்க வேண்டிய பிரமாணத்தை சிலுவையில் ஆணியடித்து முடித்து வைத்தார். (யோவான் 1:17; கொலோ 2:14; எபி 4:15-17) ஆகையால் பழைய பிரமாணம் நீக்கப்பட்ட போது, அதற்கு பதிலாக புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டது. இந்த காலக்கட்டத்தில் தான் ஓய்வு நாள், சபை கூடி வரும் நாள் என்பது மாற்றப்பட்டு, ஆராதனைக்கென்று கூடி வர தமது ஜனங்களுக்கு கர்த்தர் புதிய நாளை கொடுத்தார். அது வாரத்தின் முதல் நாளாகும். ஓய்வு நாள் வாரத்தின் ஏழாம் நாளாக இருந்தது. இப்பொழுது நாம் ஆராதனையிலும் மற்ற விஷயங்களிலும், கிறிஸ்துவை முதலாவதாக நாம் வைக்க வேண்டும்.

வேதாகமத்திலுள்ள புதிய ஏற்பாடு என்னும் பகுதி, வாரத்தின் முதல் நாளைக் குறித்து அநேக காரியங்களை கூறகிறது. அந்த நாள் ஏன் முக்கியமானது. அந்த நாளில் நாமேன் கூடி வரவேண்டும் என்று சில கருத்துக்களை நாம் இப்பொழுது காண்போம்.

**முதலாவது**, வாரத்தின் முதல் நாளிலே தான் கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார். ஓய்வு நாள் இன்றும் தேவ ஜனங்களுக்கு முக்கியமான நாளாக இருக்குமானால், அது தேவனை ஆராதிக்க தகுந்த ஒரு நாளாக

இருக்குமானால், ஏன் கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்ப்பிக்கப்பட வேண்டும்? சிலர் அது பரிசுத்தமான நாளாக இருக்கிறது. ஆகவே தான் ஓய்வு நாளிலே கிறிஸ்து எழுப்பப்படவில்லை என்று தர்கிக்க முடியும். ஆனால், கிறிஸ்து அந்த நாளில், கல்லறையை விட்டு உயிரோடெழுந்து அந்த நாளை நாம் கடைபிடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தால் அது, இன்னும் எத்தனை பரிசுத்தமாக இருந்திருக்கும். உண்மையில், வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிரோடெழுந்தது, அந்நாள் ஆராதனைக்கான நாளென வலியுறுத்தவே என்பதில் சந்தேகமில்லை. நாம் மத்தேயு 28:1 றை வாசிக்கையில், "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்" என்கிறது. இன்னும் தொடர்ந்து நாம் வாசிக்கையில், கர்த்தர் அந்நாளில் உயிரோடெழுந்தார் என படிக்கிறோம். அதே கருத்தை மாற்கு 16:1,2 லூக்கா 24:1,2 யோவான் 20:1 ஆகிய வேத பகுதிகளிலும் வாசிக்கலாம்.

**அடுத்ததாக,** வாரத்தின் முதல் நாளில் இயேசு கல்லறை விட்டு உயிரோடு எழுந்த பின்னர், இரண்டு முறை தமது சீஷர்களை சந்தித்தார், அந்த இரண்டு முறையுமே அந்நிகழ்ச்சி நடந்தது வாரத்தின் முதல் நாளிலென காண்கிறோம். நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டப்பட்டிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லி தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்". (யோவான் 20:19-20) மீண்டுமாக நாம் வாசிக்கையில், "மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி; நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக; என் ஆண்டவரே ! என் தேவனே ! என்றான். அதற்கு இயேசு; தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவான் 20:26-29) என்று கவனிக்கிறோம்.

இயேசு உயிர்த்தெழுந்தது வாரத்தின் முதல் நாளிலே அவர் அன்றைக்கு சாயங்காலம் தான் சீஷர்களுக்கு தரிசனம் தந்தார். அதன் பின்பு

எட்டு நாள் கழிந்து தன் சீஷர்களுக்கு மீண்டும் தரிசனம் தந்தார் என்று நாம் காண்கிறோம். அது வாரத்தின் முதல் நாள் என்று தானே அர்த்தம். புதிய ஏற்பாடு, வாரத்தின் முதல் நாளுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்திருக்க, மனிதர்கள் அதை மாற்றுவது எவ்வளவு விசித்திரமானது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதல் நாளாயிருக்கிறது. அவர் சீஷர்களுக்கு தரிசனம் தந்ததும் வாரத்தின் முதல் நாளாக இருக்கிறது. ஆகவே, புதிய ஏற்பாடு வாரத்தின் முதல் நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

**மூன்றாவதாக,** பெந்தேகொஸ்தே நாள் பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாளுக்கு பிறகு வாரத்தின் முதல் நாளிலே வரும். ஆகையால், நாம் அப். 2 ம் அதிகாரத்தை வாசிக்கையில் அந்த நாளை தேவன் தெரிந்து எடுத்து அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பினார். சுவிசேஷம் முதல் முறையாக அன்றைக்கு தான் மக்களுக்கு பிரசங்கிக்கப்பட்டது. ஆண்களும், பெண்களும் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு அன்றைக்குத்தான் பதில் கிடைத்தது. அன்றைக்கு தான் சபை ஸ்தாபிக்கப்பட்டது. இத்தனையும் வாரத்தின் முதல் நாளில் நடந்திருப்பதினால், தேவன் அந்நாளுக்கென்று ஒரு முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் என்று தானே தெரிகிறது. இந்த நாளை வாரத்தின் மற்ற நாட்களிலிருந்து பிரித்து தேவன் முக்கியத்துவப்படுத்துவதற்கு விசேஷித்த நோக்கம் இருக்கிறது. ஓய்வு நாள் இன்றைக்கும் நமது ஆராதனை நாளாக இருக்குமானால் தேவன் வாரத்தின் முதல் நாளுக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம் தரவேண்டும். கிறிஸ்தவத்தின் காலத்தில் கிறிஸ்துவின் பிராமணத்தின் கீழ் ஆராதனை நாள் மாற்றப்பட்டது. அதாவது ஓய்வு நாள் பழைய ஏற்பாட்டில் ஆராதனை நாளாக இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டிலே வாரத்தின் முதல் நாள் ஆராதனை நாளாக இருக்கிறது.

**நான்காவதாக,** ஆதி திருச்சபையார் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும்படியாக கூடி வந்திருக்கிறார்கள் என்பதற்கு நமக்கு உதாரணம் இருக்கிறது. "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்". (அப்போஸ் 20:7) இந்த வசனப்பகுதியில் நாம் பார்க்கும்பொழுது பவுலும் மற்றவர்களும் பிலிப்பி பட்டணத்திலிருந்து துரோவா பட்டணத்துக்கு கப்பல் மூலமாய் வந்தார்கள். அங்கே ஏழுநாள் தங்கி வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும்படி சீஷர்களுடன் கூடி வந்தார்கள். ஓய்வு நாளோ அல்லது வேறெந்த நாளோ ஆராதனைக்கான நாளாக இருக்குமானால், அவர்கள் அந்நாளில் கூடி வந்து பயணத்தை தொடர்ந்திருக்கலாம். ஆனால் அவர்களோ வாரத்தின் முதல்

நாள் வரும் வரை காத்திருந்தார்கள். அதற்கு பின் அந்நாளிலே என்ன நடந்தது. முதலாவதாக சீஷர்கள் கூடி வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. எதற்காக அவர்கள் கூடி வந்தார்கள் ? அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வைக்கப்பட்டிருக்கிற அப்பத்திலும், அவருடைய இரத்தத்திற்கு சாயலாக வைக்கப்பட்டிருக்கிற திராட்சரசத்திலும் பங்கு பெறும்படி கூடி வந்தார்கள். அதைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், I கொரி 11:23-29 முடிய தெளிவாக விவரிக்கிறார். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால் வாரத்தின் முதல் நாளே கிறிஸ்தவர்களுக்கு ஆராதனை நாளாக இருந்தது. ஏனெனில் கர்த்தரின் பந்தி ஆராதனையின் ஒரு பகுதியாக இருக்கிறது.

எந்த வாரத்தின் முதல் நாள்? நிச்சயமாகவே எல்லா வாரத்தின் முதல் நாளிலும் நாம் பங்கு பெற வேண்டும். பழைய ஏற்பாட்டை நாம் கவனிக்கும் பொழுது தேவன் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கச் சொன்னார். எல்லா ஓய்வு நாளையும் என்று சொல்லவில்லை. ஆனால் யூதர்கள் ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரித்து வந்தார்கள். அவர்களுக்கு ஓய்வு நாளை ஆசரிக்க நினைப்பாயாக என்று சொன்னாலே ஒவ்வொரு ஓய்வு நாளும் என்று புரிந்துக் கொண்டார்கள். ஆகவே, வாரத்தின் முதல் நாள் என்று சொல்லும்பொழுதே அது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளையும் என்ற பொருளையுடையதாயிருக்கிறது. அன்றைய தினம் அவர்கள் கூடி வந்திருக்கையில் பிரசங்கமும் நடந்தது. பவுலும் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். அவர்கள் ஜெபித்தார்கள் மற்றும் பாடினார்கள் என்று சொல்லாவிட்டாலும், அதை செய்திருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. பவுலும் ஆதிக்கிறிஸ்தவர்களும் வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படியும் தேவனை ஆராதிக்கும்படியும் கூடி வந்தார்கள் என்று நாம் அறியும் பொழுது இன்றைக்கு கிறிஸ்தவர்களாய் இருக்கின்ற நாம் அதையே செய்தாக வேண்டும்.

**ஐந்தாவதாக,** பவுல் கிறிஸ்தவர்களை வாரத்தின் முதல் நாளிலே அவனவன் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் சேர்த்து வைத்து கொடுக்கக்கடவன் என்று பவுல் கட்டளையிட்டிருக்கிறார். நாம் வாசிக்கிறோம், பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்திய நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன். (I கொரி 16:1-2) கலாத்தியா நாட்டுக்குச் செய்யப்பட்டது போலவே

கொரிந்து சபைகளுக்கும் செய்யப்பட்டது. அதாவது வாரத்தின் முதல் நாளிலே அவர்கள் சேர்த்து வைத்து கர்த்தக்கென்று கொடுக்க வேண்டியதிருந்தது. நாம் எப்படி கொடுக்க வேண்டும்? எவ்வளவு கொடுக்க வேண்டும்? என்ன நோக்கத்திற்காக கொடுக்க வேண்டும் என்பதைபற்றியெல்லாம் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், நாம் இங்கு வலியுறுத்துவது என்னவென்றால் அவர்கள் வாரத்தின் முதல் நாளிலே கொடுத்தார்கள் என்பதே வாரத்தின் முதல் நாளிலே இவர்கள் ஏன் இதை செய்ய வேண்டும்? ஏனென்றால், கிறிஸ்தவர்கள் அந்நாளிலே கூடி வரவேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறார்கள். ஆகவே தான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அந்நாளிலே கூடி வந்திருக்கிறார்கள். நாமும் அந்தபடியே செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது.

முடிவாக, வாரத்தின் முதல் நாள் என்பது பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாளைப் போல பரிசுத்தமான நாளாக மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்ததினால், பரிசுத்த ஆவி கொடுக்கப் பட்டதினால், சுவிசேஷம் முதலில் பிரசங்கிக்கப்பட்டதினால், சபை அந்நாளில் ஸ்தாபிக்கப்பட்டதினால் கனத்தை பெறுகிறது. அந்நாளிலே தேவன் தமது ஜனங்கள் ஆராதிக்கும்படிக்கு தெரிந்துக் கொண்டார்கள். ஆகவே, அது ஆவிக்குரிய ஆராதனை நாள். புதிய ஏற்பாடு சொல்லுகிறது போல வாரத்தின் முதல் நாளிலே நாம் தேவனை ஆராதிக்க கூடி வந்தால் நாம் எந்த தவறும் செய்வதில்லை. உண்மையை சொல்வோமானால், எபிரெய ஆசிரியர் சொல்லுவதுப் போல, நாம் சபை கூடி வருதலை விட்டு விடக்கூடாது. (எபி 10:25) தேவன் நமக்கு நிர்ணயித்த இந்நாளிலே நாம் ஒன்றாக கூடி அவரை துதிப்பதும், அவரை ஆராதிப்பதும் எத்தனை சிலாக்கியமான விஷயம்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? தேவனை ஆராதிக்கும்படி மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாளிலே சபையாக கூடி வருகிறீர்களா? இல்லையென்று சொன்னால் கர்த்தருடைய வேதத்தை தொடர்ந்து படித்து, கிறிஸ்துவை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். நீங்கள் இதை செய்தால் கர்த்தர் தமது சபையிலே சேர்ப்பார். அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம் முழுவதையும் வாசித்து தெரிந்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆமென் !

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# சபை வளர்ச்சியில் பெண்களின் உதவி

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ! இம்மாதமும் உங்களோடு தேவனுடைய காரியங்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். எந்தெந்த வகையில் நாம் நம்முடைய சபை வளர்ச்சியில் உதவி செய்வது என்பது பற்றி வசன ஆதாரங்களுடன் பார்ப்போம்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையில் **"போய் சீஷராக்குங்கள்"**, (மத் 28:18-20) என்ற பகுதியை எடுத்து நாம் எப்படி அந்த வேலையைச் செய்ய முடியும் என்று பார்ப்போம். அதற்கு முன்பாக தேவ ஆவியானவர் பெண்களாகிய நமக்கு கொடுத்திருக்கும் ஆலோசனையைப் பார்ப்போம். **"ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடைய வளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும்"**. (I தீமோ 2:11,12) இந்த வசனத்தை நம் இருதயத்தில் மறவாமல் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். **தேவனுடைய காரியங்களை பிறரிடம் போய் பகிர்ந்து கொள்வதற்கு நாம் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்தவர்களாக இருக்க வேண்டும்.**

**முதலாவது,** நாம் ஏன் கிறிஸ்தவர்களாக மாறினோம் என்பதை நம் குடும்பத்தாருக்குச் சொல்ல வேண்டும். யோவான் 1:40, 41 ஆகிய வசனங்களில் யோவான் சொன்னதைக் கேட்டு, அவளுக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு **மேசியாவைக் கண்டோம்** என்று சொன்னான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். நாமும் அந்திரேயாவைப் போல் இருப்போம்.

மற்றொரு சம்பவம் (அப். 16:14,15) ல் இடம் பெற்றுள்ளது. அது தான் லீதியாளின் மனமாற்ற சம்பவம் என்று நாம் அறிவோம்.

லீதியாள் பவுலின் பிரசங்கத்தை கேட்டாள். பின்பு தன் வீட்டாரோடு கூட ஞானஸ்நானம் பெற்றாள். இவள் தன் பவுலின் போதனையை வீட்டார் கேட்கச் செய்திருக்க வேண்டும். தன் வீட்டாரோடு கூட இந்த லீதியாள் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டாள்.

**இரண்டாவதாக,** தேவனுடைய வார்த்தைகளைப் படித்து ஆராய்வதற்கு, மற்றவர்களை, நம் வீட்டிற்கு அழைத்து வருவது. ஆதி திருச்சபையார் இவ்வாறு செய்தார்கள். **"தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்".** (அப். 5:42) நாமும் கூட நமக்கருகாமையில் வசிக்கும் பெண்களை நம் வீட்டிற்கு வரவழைத்து அவர்களோடு வேதத்தைப் படித்து தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார், வேதாகமம் நம்மை என்ன செய்ய சொல்லி உபதேசிக்கிறது என்பது பற்றி ஆராய்லாம்.

**மூன்றாவதாக,** நம்மோடு கூட ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ளவும், வாரத்தின் இடைப்பட்ட நாளில் நடக்கும் வேத ஆராய்ச்சி வகுப்பில் கலந்து கொள்ளவும் மக்களை அழைத்து வரலாம். புதிய ஏற்பாட்டில் சமாரியா ஸ்திரீ தான் இயேசுவை பார்த்து, சம்பாஷித்து விட்டு ஊருக்குள்ளே சென்று, **"வந்து பாருங்கள்"** என்று ஊராரை அழைத்து வரும் சம்பவம் இடம் பெற்றுள்ளது (யோவான் 4:28-30, 39-42). நாமும் பெண்களிடம் சென்று சபைக்கு வரச்சொல்லி வந்து பாருங்கள் என்று அழைத்து வரலாம்.

**நான்காவதாக,** நாம் நம்முடைய பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் தேவனைப்பற்றியும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் கற்றுக் கொடுப்பதின் மூலம் நம் தலைமுறைகளையும் கர்த்தருக்குள் கொண்டு வர முடியும். தீமோத்தேயு மாயமற்ற விசுவாசத்தை தன் தாயாகிய ஐனிக்கேயாளிடமிருந்தும், தன் பாட்டியாகிய லோவிசாளிடமிருந்தும் பெற்றுக் கொண்டான் என்று I தீமோ 1:5 ல் வாசிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ! மேற்சொன்ன நான்கு காரியங்கள் வாயிலாகவும் நாம் கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற முடியும். போய், சீஷராக்கும் வேலையை நாமும் செய்யலாம். இனி, எதிலும் மேலான காரியம் என்னவெனில் நம்முடைய **வாழ்க்கையின் மூலம்** மற்றவர்களுக்கு பிரசங்கிப்பது, கிறிஸ்தவள் என்று கூறிக்கொண்டு மற்றவர்களைப் பற்றி முணுமுணுத்தல், சண்டையிடுதல், எதற்கெடுத்தாலும் பொய் பேசுதல், குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஆண் ஏற்க அனுமதிக்காமல் தானே கவனித்தல் இப்படி காரியங்களைச் செய்தால் நம்முடைய பேச்சையும், நம் போதனையையும் யார் கேட்பார்கள்? **"அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின் படி செய்கிறவர்களாயும்**

**இருங்கள்"** (யாக் 1:22) என்ற வாக்கியத்தின் படி வசனத்தின்படி செய்யவும், வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். நாம் ஒன்றை செய்யும் போது பிறர் அதை கவனிப்பார்கள். நம் வாழ்க்கையின் மூலம் பிறருக்கு போதனை செய்யலாம். இப்படியாக செய்யும் போது நாம் சார்ந்திருக்கும் சபையின் வளர்ச்சிக்கு நாம் உதவ முடியும். யோசுவாவைப் போல குடும்பத்திற்கு உத்திரவாதம் கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். சபையின் தீர்மானங்களுக்கு நம் குடும்பம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். தேவனுடைய வேலைக்காக தாராளமாக கொடுத்து உதவ வேண்டும். நம் பிள்ளைகளை சபைக்கடுத்த வேலைகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். உபதேசத்தில் மிகவும் உறுதியாய் இருக்க வேண்டும். திருமணம், வேலை, உறவு போன்ற காரியங்கள் நாம் உபதேசத்தை விட்டு வழி விலகிச் செல்ல ஒரு போதும் இடம் கொடுக்கவே கூடாது. இப்படிப்பட்ட குடும்பத் தலைவிகள் இன்றைக்கு சபைக்கு தேவை.

ஆராதனையில் கலந்து கொள்ள முடியாதவர்களைப் போய் சந்திக்க வேண்டும். வருத்தம், நோய், கஷ்டத்தில் இருப்பவர்களிடம் அன்பாக பேசி முடிந்தளவு உதவி செய்ய வேண்டும். வசனத்திற்கு விரோதமாய் பெண்கள் செயல்படும் போது வசனத்தின் அடிப்படையில் அவர்களை அணுகி அன்பாக கண்டிக்கலாம். வீடு சந்திப்புக்கள் போது மற்ற பெண்களை நம்மோடு கூட்டிச் செல்லலாம். கலா 6:10 ல் உள்ளபடி **"நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார் களுக்கும், நன்மை செய்யக்கடவோம்"**. நம்மால் முடிந்தளவு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள சிறந்ததை பிறருக்கு கொடுக்க பழகிக் கொண்டால் தேவன் அதில் பிரியப்படுவார். நான் என்னுடையதை கொடுக்கிறேனே, எனக்கு யார் கொடுக்கிறார்கள், நான் இதை தியாகம் செய்தேனே, எனக்கு யார் தியாகம் செய்கிறார்கள், பிறர் எனக்கு எந்த உதவியும் செய்யாத போது நான் மட்டும் ஏன் உதவி செய்ய வேண்டும் என்று எண்ணாமல், தொற்காளைப் போல சபையில் உள்ள பெண்களுக்கு உதவி செய்யப் பழகுவோம். (அப் 9:36-39)

இப்பேர்ப்பட்ட காரியங்களை ஒவ்வொரு பெண்ணும் கடைபிடிக்கும் போது நாம் சார்ந்திருக்கும் சபையை ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையச் செய்ய முடியும். ஒவ்வொரு குடும்பமும் உபதேசத்தில் உறுதியாய் இருக்கும் போது கட்டாயம் பலமான சபையைக் கட்ட முடியும். குடும்பம் விசுவாசத்தில் வளர வேண்டுமானால் குடும்பத்தில் பெண் முதலாவது தன்னை ஒரு பூரண கிறிஸ்தவளாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அநேக இடங்களில் சபை வளர்ச்சியடையாததற்கு காரணம் பெண்கள் தான்.

சுயநலம், குறுகிய மனப்பான்மை இவைகள் தான் காரணம். தன் கணவன், தன் பிள்ளைகள் தேவனுடைய காரியங்களில் ஈடுபட்டு பணியாற்றுவதை தடுப்பது கூடாது. சாராள் ஆபிரகாமுக்கு மாற்று ஆலோசனை கொடுத்ததின் விளைவு தேவ சித்தத்திற்கு விரோதமான சந்ததி தோன்றி, இன்றளவும் உலகில் சண்டைக்கும், சமாதானக் குறைவுக்கும் காரணமாகி விட்டது. நம் பிள்ளைகள் சபைக்காக வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். உலகத்தையும், உலகத்தில் உள்ளவர்களையும் நாம் முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் கிறிஸ்துவை நமக்கு முன் மாதிரியாக வைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய சிந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய நலன், நம்முடைய பெயர் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சபையின் பெயர் சமுதாயத்தில் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதை மையமாக வைத்து காரியங்களை ஆற்றப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய **"போய் சீஷராக்கு"** என்ற வேலையில் நம்மையும் இணைத்துக் கொள்ள முடியும். சாதனைகள் பல புரியும் பெண்களின் உலகத்தில், நாம் இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதே சாதனை என்று உறுதி பூண்டு செயல்படுவோம். நாம் சார்ந்திருக்கும் சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருப்போம். ஆமென்!

**ரேச்சல் நாயகம்**

## சுவிசேஷம் நமக்கு என்ன செய்கிறது?

1. **பாவத்தின் பெலனிலிருந்து நம்மை மீட்கிறது. [கொலோ 1:3]**
2. **பாவ கரையிலிருந்து நம்மை மீட்கிறது. [1 யோவான் 1:7]**
3. **பாவ பழக்க வழக்கங்களிலிருந்து நம்மை விடுதலை ஆக்குகிறது. [1 கொரி 6:9,11]**
4. **பாவத்தினால் வரும் விளைவாகிய ஆவிக்குரிய மரணத்தில் இருந்து விடுவிக்கிறது. [ரோமர் 6:23]**
5. **பாவத்தின் பிரசன்னத்திலிருந்து நம்மை விடுதலை ஆக்குகிறது. [கலா 1:4]**

வாலிபர் பகுதி

# இது உனக்காக வைக்கப்பட்டிருந்தது

**வை**யகத்தை தன் அநந்த அறிவால் வனைந்தெடுக்கும் முன், அதில் ஓடும் நதிகளுக்கு இப்படித்தான் ஓடவேண்டுமென்ற விதியமைக்கும் முன், ஓங்கி வளரும் விருட்சங்களை விளைய வைக்கும் முன், ஆழியில் அழகாய் நீந்தும் கெண்டை மீன்களை உருவாக்கும் முன், காட்டு ராஜ்ஜியத்தின் வேந்தனாகிய அரி முதல் அனைத்து மிருகங்களையும் படைக்கும் முன், வான வீதிகளை அலங்கரிக்கும் தாரகைகளையும், சூரியனிடம் ஒளியை இரவல் வாங்கி இரவில் வெளிச்சம் வீசும் சந்திரனையும், நிலவுக்கு ஒளி தரும் கதிரவனையும் சிருஷ்டிக்கும் முன், மண்ணிலிருந்து மனிதனை விசித்திர விநோதமாக, விஞ்ஞானிகளும் வியக்கும் வண்ணம் வனைந்தெடுக்கும் முன், தேவன் தனது அநாதி தீர்மானத்தில் மனிதன் தன் நிலையை இழந்தால் அவனை மீட்கும் திட்டத்தை வைத்திருந்தார் என்பது திண்ணம்.

இனியவனே, உறுதி கொண்ட இளைஞனே, உழைக்கப்பிறந்தவனே! உன் ஊனையும், உயிரையும் உண்டாக்கியவர் உனக்காக அநேக காரியங்களை வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்வது சாலச்சிறந்த செயலாகும். நம்மை தமது சாயலில் உண்டாக்கிய தேவன், நாம் அவரின் வார்த்தையை மீறி நடந்த போதிலும், பாவம் புரிந்து அவரைவிட்டுப் பிரிந்த போதிலும் நம்மை அப்படியே போ! அழிந்து போ! என்று விட்டு விடாமல், அன்னை தன் அருமை குழந்தையிடம் கண்ணே! மணியே! கனியமுதேயென கொஞ்சி உறவாடுவது போல், நம்முடன் உறவு கொள்ள நினைத்தார், அதன் விளைவாக நம்மை தன்னுடன் ஒப்புரவாக தனது குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பி வைத்தார். (யோவான் 3:16) தேவன் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நாம் உணர்ந்து கொள்ளவே இம்மாதம் இம்முயற்சி செய்கிறேன். உனக்காக வைக்கப்பட்டிருப்பதை சுதந்தரிந்துக் கொள்வாயென்ற நம்பிக்கையுடன்.

## என்ன வைக்கப்பட்டிருக்கிறது?

எகிப்து தேசத்து ஏகாதிபத்தியத்தினால், பத்தியச் சோறு சாப்பிடுகிறவனைப் போல மெலிந்து போனார்கள் இஸ்ரவேலர்கள். எகிப்தின் பார்வோன், இஸ்ரவேல் ஜனங்களை அடிமை சங்கிலிகளால் பிணைத்து, கொடுக்கப்பட்ட வேலை செய்யப்படாவிட்டால் அவர்களை சாட்டையால் அணைத்து, அதை எதிர்த்து கணைத்தால், இரும்புக்கரம் கொண்டு அடக்கிவிடுவதை தாங்க முடியாமல், தற்பரனிடம் தங்களை தாழ்த்தி தவமிருந்ததின் விளைவாக வெற்றி வேந்தனாம் பரலோக தேவன்

பித்துபிடித்த பார்வோனின் கோரப்பிடியிலிருந்து பத்து வாதைகளை நடப்பித்து விடுவித்தார். விடுதலை கீதம் முழங்கிய இஸ்ரவேலர்கள் செங்கடல் கடந்து கானான் தேசத்திற்கு கர்த்தரின் துணையோடு வந்தடைந்தார்கள்.

கர்த்தர் அவர்களை கானானில் தன் கருணைக் கரம் கொண்டு காத்து வந்தார். ஆனால் அவர்களோ சுற்றம் பார்த்து, எங்களுக்கும் கொற்றவனைக் கொடுமென்ற விண்ணப்பத்தை சாமுவேல் தீர்க்கனிடம் வைத்தார்கள். அச்சமயத்தில் தான் கழுதையை தொலைத்தான் சவுலின் தகப்பானாகிய கீஸ் என்னும் மகா பராக்கிரமசாலி. இந்த பென்யமீன் கோத்திரத்தானாகிய சவுல் தன் வேலைக்காரனுடன் தன் தகப்பனின் கழுதையைத் தேடி, சூப் என்னும் நாட்டிற்கு வந்தான். ஆனால் அவன் கழுதையையோ காணவில்லை. அவர்கள் அப்பட்டணத்தில் ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேல் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அவனைத் தேடிப் போனார்கள். அப்படித் தன்னைத் தேடிவந்த சவுலுக்கு சாமுவேல் பெரிய விருந்து பண்ணினான்.

சாமுவேலின் விருந்தாளியாக கலந்து கொண்ட சவுலிடம் என்ன சொல்லப்படுகிறது என்பதை கவனியுங்கள். "ஒரு முன்னந் தொடையையும் அதனோடே இருந்ததையும் எடுத்துக் கொண்டு வந்து ........ **இதோ இது உனக்கென்று வைக்கப்பட்டது.**" என்றான் (I சாமுவேல். 9:24) அதன் பின்பு, சாமுவேல் சவுலை தைலக் குப்பியிலிருந்த தைலத்தால் அபிஷேகம் செய்து இஸ்ரவேல் அனைத்திற்கும் ராஜாவாக்கினான்.

எனக்கன்பான வாலிபர்களே! உலகச் சிந்தனை கொண்டு இவ்வுலகப் பொருளைத் தேடிப்போன சவுலுக்கு, ஆட்டின் முன்னந் தொடை விருந்தாக வைக்கப்பட்டிருந்தது. அதுமாத்திரமா? இஸ்ரவேல் முழுமைக்கும் வேந்தனாக முடி சூட்டப்பட்டானவன். அதுபோலவே, நாமும் இப்புவிக்குரியவைகளில் நமது நாட்டத்தை செலுத்திக்கொண்டு, நமது அகமெல்லாம் இகத்தைப் பற்றிய நினைப்புடையவர்களாய் பொழுதைப் பயன்படுத்தாமல் போக்கி கொண்டு இருந்த வேளையில் நம் பாவ நோக்காடு நீங்கி மீட்க வேண்டுமென்ற நோக்கோடு ஆண்டவர் விண்ணுலகை விட்டு மண்ணுலக மைந்தனாக அவதரித்தார்.

ஆதியில் தேவனோடு நமக்கிருந்த உறவை மீட்டமைக்க வந்தவர், தம்மையே மீட்கும் பொருளாக கொடுத்தார் என்பதுதான் விந்தையிலும் அதிவிந்தை. விவிலியம் அதைப்பற்றி விளம்புகையில், "குறித்த காலத்தில் **கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.**" (ரோமர் 5:6) என்கிறது. எனக்கன்பானவர்களே! பார்த்தீர்களா? விண்ணவரின் வியக்கத்தகு அன்பை! அக்கிரமத்தில் மரித்துக்கொண்டிருந்த நமக்காக அவர் மரித்து தேவ அன்பை விளங்கப்பண்ணினார். நல்லவனுக்காக ஒருவன் மரிக்கத் துணிவான், ஆனால், நமது இரட்சகரோ பாவிகளாயிருந்த நமக்காக அல்லவோ மரித்தார்.

வாலிபர்களே! இப்படிப்பட்ட அன்பை உணர்ந்து நாம் செய்த பாவத்திலிருந்து நமது மனதை தேவனிடமாய்த் திருப்பி ஞானஸ்நானத்தின் மூலமாய் அவருக்கு கீழ்ப்படிகையில் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் வைக்கிறார் பிதாவாகிய தேவன் (கலா. 3:26,27) இப்பொழுது நாம் நம்முடைய விண்ணுலக தந்தை நமக்காக என்ன வைத்திருக்கிறார் என சிந்திக்கலாவோம் வாருங்கள் வாலிபர்களே! எபே. 1:3 சொல்லுகிறது, "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்"

உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்குள் நமக்கு பாவமன்னிப்பை, மீட்பை, சுதந்திரத்தின் அச்சாரத்தை, இரட்சிப்பை வைத்திருக்கிறார். (எபே. 1:7,13, IIதீமோ. 2:10) நாம் அவருக்குள் இருந்தால் தேவனோடு நமக்கு சமாதானம் உண்டு. ஆக்கினைத் தீர்ப்பும் நமக்கில்லை (ரோமர். 5:1, 8:1) தமது சொந்த குமாரனையே நமக்காக ஈந்த நமது தேவன் அவர் மூலமாய் இத்தனை ஆசீர்வாதங்களையும் நமக்காக வைத்திருக்கிறார் என்பது எத்தனை ஆச்சரியம்.

கீசின் குமாரனுக்கு விருந்து கிடைத்ததைப் போல நமக்கு இத்தனையும் கொடுத்தவர் அத்தோடு நிறுத்தாமல் நாம் கிறிஸ்துவுக்குள் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தால் நித்திய ஜீவன் என்னும் சுதந்திரத்தை பரலோகத்தில் நமக்கு வைத்திருக்கிறார் (1பேதுரு 1:5) இப்புவியில் இருக்கும் போதே நம்மை ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும் மாற்றியிருக்கிறார் (1பேதுரு 2:9) இத்தனையும் நமக்காக அவர் வைத்திருக்கையில் அவர் சித்தம் செய்வது தானே வாலிபர்களாகிய நம்மீது விழுந்த முதலும் மூத்த கடமையுமா யிருக்கிறது.


சிந்தனைக்கினியவனே! என் இனிய நண்பனே! இளமை என்னும் அருவியில் நனைந்து கொண்டிருப்பவனே! சவுலுக்கு முன் வைக்கப்பட்டதை விட உனக்கு முன் இறைவன் வைத்திருப்பது எத்துணை மடங்கு சிறந்ததாய் இருக்கிறது என்பதை உணர்ந்துகொள். இதை உன்னுடையதாக்கிக் கொள்ள உனக்கு சவால் விடப்படுகிறது என்பதை புரிந்துகொள். அத்துணையும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறதென்பதை மறந்து விடாதே. அவருக்குள் போவதற்கு ஞானஸ்நானம் தான் ஒரே வழி என்பதை மறந்தும் இருந்து விடாதே. ஏற்கனவே நீ கிறிஸ்துவுக்குள் இருந்தால் உன் ஆசீர்வாத நிலைமையைத் தக்க வைத்துக் கொள்வாயென திடமாய் நம்புகிறேன். தேவனிடத்தில் அதற்காய் வருந்தி விண்ணப்பிக்கிறேன்! ஆமென்!!

**ஜே. பிக்கின்ஸ்**

சிறுவர் பகுதி

# தேவன் உலகத்தை அழித்தபோது

எனதருமை சிறுதம்பி, தங்கைகளே! இம்மாதமும் இக்கட்டுரையின் மூலமாய் சந்திப்பதில் சந்தோஷமடைகிறேன். நாம் இச்சிறுபிராயத்திலிருந்தே தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கற்று அதை புரிந்து கொண்டு அதற்கு கீழ்ப்படிவது மிகச்சிறந்த செயலாகும். ஆதலால் இம்மாதம் தேவனால் பேழை ஒன்று கட்ட வேண்டுமென்று கட்டளையொன்று பெற்று அக்கட்டளைக்கு முழுவதுமாய் தன்னைக் கீழ்ப்படித்திய நோவாவைக் கொண்டு சில பாடங்களை கற்றுக்கொள்வோம். தம்பி, தங்கைகளே!



தேவன் மீது அன்பு கூராமலும் அவருக்குக் கீழ்ப்படிவதில்லையென்று தங்கள் மனதிலே தீர்மானித்துக் கொண்டும் இருந்த மக்களை பற்றி பழைய ஏற்பாடு ஒரு துக்கமான செய்தியை, ஆனால், உண்மை செய்தியை நமக்குச் சொல்லுகிறது. அச்செய்தி ஆதியா 6-ம் அதிகாரத்திலே ஆரம்பிக்கிறது. அப்புத்தகத்தின் எழுத்தாளரான மோசே கூறும் போது, மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, (ஆதி 6:5) என்கிறார். பூமியின் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் பாவத்தின் மேல் பாவம் செய்து கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட தேவன் தாம் உலகம் முழுவதையுட் அழிக்கப் போவதாக அறிவித்தார். வேதாகமம் சொல்லுகிறது. "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்; நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்

பண்ணுவேன். நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது" என்றார். (ஆதி 6:6-7) இப்பூமியை மூடும் ஜலப்பிரளயத்தை அனுப்பி, ஜனங்களையும், நிலவாழ் மிருகங்களையும் அழிக்கும்படி தேவன் தீர்மானித்தார் (ஆதி. 6:17)

எனதருமை தம்பி, தங்கைகளே! பூமி முழுவதும் தீமை செய்து கொண்டிருந்த மக்கள் வாழ்ந்துக் கொண்டிருந்ததையும் அவர்களை தேவன் அழிக்க தீர்மானித்ததையும் உங்களால் நினைத்து பார்க்க முடிகிறதா? அதிர்ஷ்டவசமாக பொல்லாங்கு செய்யாத ஒரே ஒரு மனிதர் இருந்தார். அவர் பெயர் நோவா. ஆதி 6:9- சொல்லுகிறது, அவன் தேவனோடு சஞ்சரித்தான் என்று. அதாவது அவன் நீதிமானாகவும், பாவம் செய்யக் கூடாதென்று தன்னால் ஆனமட்டும் முயற்சி செய்தான் என்றும் இதற்கு அர்த்தம். தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பதாக வாக்களித்தார்.

ஆனால், நோவா காக்கப்பட தன் பங்குக்கு ஒன்று செய்ய வேண்டியதாயிருந்தது. ஜலப்பிரளயத்தில் தானும் சில மிருகங்களும் காக்கப்படுவதெப்படி என்று நோவாவுக்கு தேவன் சொன்னார். அதாவது, நீ பேழையை கட்டவேண்டும் என்று கட்டளையிட்டார். அது கொப்பேர் மரத்தால் கட்டப்படவேண்டுமென்றும், உள்ளும் புறமும் கீல் பூசவேண்டும் என்று சொன்னார். அப்படி கீல் பூசுவது மரத்தினிலே உள்ள வெடிப்பின் வழியாய் தண்ணீர் உள்ளே போகாமல் இருக்க. இது இப்படி செய்யப்பட்டது. மூன்று அடுக்குகளும் மிருகங்கள், பறவைகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளும் செய்யப்பட்டது. அந்தப் பேழைக்கு **ஒரு கதவும், ஒரு ஜன்னலும்** இருந்தது.

இப்பூமியில் நூற்றிருபது வருடங்கள் மாத்திரமே ஜனங்கள் வாழ அனுமதிப்பேன் என்று தான் பூமியை அழிப்பதற்கு முன்பு தேவன் சொன்னார் (ஆதி 6:3) இது நடந்தபொழுது நோவா ஐந்நூறு வயதுள்ள வனாயிருந்தான் அவனுக்கு சேம், காம், யாப்பேத் என்னும் மூன்றுக் குமாரர்கள் இருந்தார். தேவன் இப்பூமியில் ஜலத்தை அனுப்பும் போது அவனுக்கு வயது அறுநூறு (ஆதி 7:11) நோவா பேழையைக் கட்டி முடித்தான். பேழையை நோக்கி மிருகங்களும், பறவைகளும் வரும்படி கர்த்தர் செய்தார். (ஆதி 6:19, 7:9) சில நாட்களுக்கு பின்பு, அந்த மகா வெள்ளத்தை தேவன் பூமியின் மீது அனுப்பினார். நாற்பது நாள் இரவும் பகலும் ஓயாமல் மழை பெய்தது. பூமியின் ஊற்றுக்கண்களும் திறக்கப்பட்டது. அதின் விளைவாக பூமி முழுவதும் தண்ணீரால் மூடப்பட்டது. (ஆதி 7:11,12,19)

பேழைக்குள் இருந்த நோவாவின் குடும்பமும், மிருகங்களும், பறவைகளும் அவரால் காக்கப்பட்டது. வேதாகமம் சொல்லுகிறது தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டு மிருகங்களையும், சகல நாட்டு மிருகங்களையும் நினைத்தருளினார். தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணினார். அபபொழுது ஜலம் அமர்ந்தது. (ஆதி 8:1) தேவன் அவர்களை நினைத்தருளினார், என்பதற்கு அவர்களை மறந்து விட்டார் என்று அர்த்தமல்ல. தேவன் நோவாவை காத்தருளினார் என்று தான் அர்த்தம். பேழைக்கு வெளியே இருந்த எல்லாம் மாண்டுப் போயிற்று (ஆதி 7:21-23) நோவாவின் வீடு, நண்பர்கள், அவர்கள் ஒரு காலத்தில் அறிந்திருந்த பூமி எல்லாம் இந்த மகா வெள்ளத்தால் அழிந்துப்போயிற்று. இது அவர்களுக்கு வேதனை தந்திருக்கும் அல்லவா!

அதே சமயத்தில், அவர்கள் உயிரோடு காக்கப்பட்டதைக் குறித்து மகிழ்ச்சியாயிருந்திருப்பார்கள். அரராத் மலையிலே பேழை நின்றது. பேழைக்குள் காக்கப்பட்டவர்களும், மிருகங்களும் தங்களுக்கான புதிய இல்லத்தை நோக்கி நகர்ந்தார்கள். தேவனுக்கு நன்றி சொல்லும் விதமாக நோவா பலி செலுத்தினான். தேவன் அவருடைய பங்குக்கு பூமியை இனிமேல் தண்ணீரினால் அழிக்கமாட்டேன் என்று வாக்களித்தார். அதற்கு அடையாளமாக வானவில்லை வைத்தார். (ஆதி 9:8,17)

அந்த மகா வெள்ளம் முடிந்து போயிற்று. நோவாவும் அவன் குடும்பங்களும் திரும்பவும் தங்கள் இல்லங்களை கட்டத் தொடங்கியிருப்பார்கள். அவர்கள் அதை செய்கின்ற வேளையில் அவர்களை சுற்றியிருந்தவைகளெல்லாம் நடந்து முடிந்த பயங்கரத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கும். இன்றைக்கும் வானவில்லை நாம் பார்க்கும் வேளையில் மூன்று காரியங்களை நினைவில் கொள்கிறோம்.

**1. தேவனுக்கு விரோதமான பாவம் பயங்கரமானது**

**2. தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியமானது**

**3. தேவன் தனது வாக்குத்தத்தத்தை காப்பாற்றுகிறவர்.**

நோவா இப்பாடங்களைக் கற்றுக்கொண்டார். நாமும் இச்சிறு வயதிலிருந்தே இவைகளைக் கற்றுக்கொள்வோமாக தேவனுக்குப் பிரியமாய் நடப்போமாக! ஆமென்!

**மனன வசனம் :**
**ஆதியாகமம் 6:22**

**- மொழியாக்கம் செய்யப்பட்டது**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

இயேசு தம்மை பின்பற்றுபவர்களிடத்தில் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என கட்டளை யிட்டிருந்ததை நாம் பார்த்தோம். அந்த சுவிசேஷச் செய்தியில் விசுவாசத்தின் தேவையும் கடந்த கால பாவத்திற்கான மனந்திரும்புதலும், இயேசுவுக்குள் நமக்கு இருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்வதும், ஞானஸ்நானம் பெறுவதும் அடங்கும். நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நம்முடைய கடந்த கால பாவத்திலிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும். ஞானஸ்நானம் பெற்ற பிறகு நம்முடைய அருமை இரட்சகர் கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் செய்ய நாம் போராட வேண்டும்.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகளின் வசனங்களில் படித்தபடி இயேசுவைப் பின்பற்றினவர்கள் உண்மையாக அந்த சுவிசேஷச் செய்தியை பிரசங்கித்தார்கள் என்று நாம் கவனித்தோம். மேலும் புதிய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகமாகிய அப்போஸ்தலருடைய நடபடிகளில் மனமாற்றச் சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் மக்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று தேவன் சொல்லுகிறார். தேவன் கட்டளையிட்டபடியே அவர்கள் செய்து போது ஞானஸ்நானம் பெற்றபோது அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் வேறு புஸ்தகங்களிலும் கீழ்க்காணும் காரியங்களை அவர்கள் அனுபவித்தார்கள் என்று தேவன் சொல்கிறார். அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றார்கள். களிகூர்ந்தார்கள், இரட்சிக்கப்பட்டார்கள், மீட்கப்பட்டார்கள், மன்னிக்கப்பட்டார்கள், பாவங்கள் கழுவப்பட்டார்கள்.

ரோமர் 6:3,4-ல், ஒருவன் தண்ணீரில் மூழ்கும்போது (அடக்கம் செய்யப்படும்போது) அவன் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறான். அங்கே ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் பெறுகிறான். கிறிஸ்துவினுடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது ஆத்துமாவை சுத்திகரிக்கும் நன்மைகளை அவருடைய இரத்தத்திலிருந்து பெறுகிறான். அதின் விளைவாக பாவங்கள் கழுவப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்திருக்க முடியும். சரியான முறையில் ஞானஸ்நானம் பெறுவதின் நன்மைகள் இவ்வளவு தான் என்று தேவன் சொல்லவில்லை.

ரோமர் 6:17,18 வசனங்களை வாசியுங்கள். பவுல் யாருக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ அவர்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தார்கள் ஆனால் அவர்களுடைய நிலைமை மாறிவிட்டது எப்படி? அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு அவர்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே அவர்களுடைய நிலைமை மாறினது. இதே அதிகாரத்தில், 3,4 வசனங்களை ஆதாரமாகக் கொண்ட இந்த உபதேச சட்டத்தில் தண்ணீரில் மூழ்குதல் அடங்கியுள்ளது.

அவர்களுடைய பங்கில் விசுவாசத்தின் அழகான செயலின் பலன் என்ன? அவர்களுடைய பழைய பாவங்களிலிருந்து விடுபட்டார்கள் ! கிறிஸ்துவினுடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதினால் கடந்த காலப் பாவத்திலிருந்து கழுவப்பட்டார்கள். அவர்கள் தேவனுக்கு அந்த வழியில் கீழ்ப்படிந்ததினால் முன்பு இருந்தது போல் பாவத்துக்கு அடிமைகளாயிராமல் நீதிக்கு அடிமைகளானார்கள்.

1கொரிந்தியர் 12:13யை வாசியுங்கள் நாம் சரியாக ஞானஸ்நானம் பெறும்போது, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்.

எபேசியர் 1:22,23 யை வாசியுங்கள் அந்த ஒரே சரீரம் கிறிஸ்துவின் சபை. எபேசியர் 1:3யை வாசியுங்கள் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இயேசுவுக்குள் இருக்கிறது. எனவே, அது அவருடைய சபையாக இருக்கிறது. இந்த அற்புதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் கிறிஸ்துவுக்குள் அவருடைய சபையில் ஞானஸ்நானம் பண்ணப் படவேண்டும்.

கலாத்தியர் 3:26,27யை வாசியுங்கள் தேவன் இங்கே என்ன சொல்கிறார்? நம்முடைய விசுவாசம் நம்மை தண்ணீருக்குள் மூழ்கத் தூண்டும்போது நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம், அவரைத் தரித்துக் கொள்ளுகிறோம் அவருடைய பிள்ளைகளாகிறோம்.

பிரியமானவர்களே, இங்கே இரண்டு முக்கியமான காரியங்களை கவனியுங்கள். முதலாவது, நாம் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இருக்கிற இயேசுவில் இணைக்கப்படுவதற்கு நாம் அவருக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டும். இரண்டாவது, விசுவாசத்தினால் ஒருவர் தேவனுடைய கட்டளைக்கு தன்னை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்வரை தேவனுடைய பிள்ளையாக முடியாது.

எபேசியர் 4:5யை வாசியுங்கள் தேவன் அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக எபேசு பட்டணத்தாருக்கு இந்த நிருபத்தை வெளிப்படுத்தினார். ஒரே ஒரு ஞானஸ்நானமே ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று தேவன் சொன்னார்.

அதற்கு முன்பு அங்கே அநேக ஞானஸ்நானங்கள் இருந்தன. உதாரணமாக யோவானுடைய ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். ஆனால், பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் இருந்தது. நாம் வசனங்களில் வாசித்தபடி அந்த ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் மூழ்கும், முழுக்கு ஞானஸ்நானமாகும், அந்த ஞானஸ்நானத்தை நாம் கடந்த கால பாவங்களிலிருந்து பாவ மன்னிப்பைப் பெறப் பெறுகிறோம்.

ஆக, மத உலகில் பிரசிங்கப்படும் தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகியவை எபேசியர் 4:5 வசனத்துடவ முரண்படுகிறது. அவர்கள் இரண்டு ஞானஸ்நானங்கள் என்று போதிக்கிறார்கள் ஆனால், தேவன் அவர் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொல்கிறார். தேவனுடைய வசனத்தை மீறும் இத்தகைய போதனையையும், பழக்கத்தையும் நிறுத்துமாறு நாம் அன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறோம்.

ஒருவர் சரியான ஞானஸ்நானம் பெறாவிட்டால் இரண்டாவது முறை அவர் ஞானஸ்நானம் பெறக்கூடாது என்று தேவன் இந்த வசனத்திலும் சரி வேறு எந்த வசனத்திலும் சொல்லவில்லை. அப்போஸ்தலருடைய நடபடிகள் 19:3,5 வசனங்களில் தேவன் இதைத் தெளிவுபடுத்தியுள்ளார். பவுல் அங்கே சில சீஷர்களைக் கண்டு அவர்கள் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்ததைக் கண்டான். பின்பு, அவர்கள் இயேசுவின் ஞானஸ்நானம் பெற்றார்கள் அவர்கள் முன்பு சரியான ஞானஸ்நானம் பெறவில்லை.

இங்கே ஒரு காரியத்தை நன்றாகக் கவனியுங்கள். அவர்கள் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சத்தியத்தைக் கற்றுக் கொண்டபோது, அவர்கள் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் மறுபடியும் ஒருமுறை சரியான ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள். அவர்கள் இதை தேவனால் ஏவப்பட்ட கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுக்கு முன்பாக செய்தார்கள்.

எனவே இதற்கு முன்பு தவறான ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தால் எபேசியர் 4:5, சரியான ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள தடை செய்யாது. தேவன் சொல்கிறார் அந்த ஒரே ஞானஸ்நானம் முழுக்கு ஞானஸ்நானமாகும்; தண்ணீரை ஊற்றுதலோ, தெளித்தலோ அல்ல. அது பாவமன்னிப்பைப் பெறுவதற்கும், புதிய ஆத்மீக வாழ்வைப் பெறுவதற்கும் ஆகும். அது கிறிஸ்துவின் சபைக்குள் சேர்க்கப்படுவது ஆகும். மனிதர்களால் கட்டப்பட்ட மார்க்க பிரிவினை சபையில் அல்ல. உங்களுடைய கடந்த கால

ஞானஸ்நானத்தைப்பற்றி ஏதாவது கேள்விகளிருந்தால் எங்களோடு தொடர்பு கொண்டு அதைப் பற்றிப்பேச நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள்.

கொலோசெயர் 2:11-13யை வாசியுங்கள். 12 ஆம் வசனத்தில் தேவன் மறுபடியும் வேதாகம ஞானஸ்நானம் அடக்கம் பண்ணப்படுதல் என்பதை தெளிவாக்குகிறார். ஆக, இது தண்ணீர் முழுக்கு. அதுமாத்திரமல்ல நாம் சரியான ஞானஸ்நானம் பெறும்போது நாம் இயேசுவுடன் இணைக்கப்படுகிறோம். நாம் அவரோடு அடக்கம் பண்ணப்படுகிறோம் ஆனால், வேதாகம ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்படுவது மாத்திரமல்ல, அவரோடு நாம் எழுப்பப்படுகிறோம். ரோமர் 6:4-ல் நாம் வாசிக்கிறபடி, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு கிறிஸ்துவுடனே கூட எழுப்பப்பட்டிருக்கிறோம்.

ஞானஸ்நானம் என்பது மத உலகில் சொல்வது போல் மனிதருடைய கிரியைகளினால் வருவது அல்ல. பன்னிரெண்டாம் வசனத்தைக் கவனமாக வாசியுங்கள். ஞானஸ்நானத்திலே யார் கிரியை செய்கிறார்? அது நிச்சயமாக பலவீனமான மனிதன் அல்ல. கிரியை செய்கிறவர் தேவனாயிருக்கிறார். நாம் அவருடைய கட்டளையான முழுக்குதலுக்கு நம்மை நாம் தாழ்மையாகவும், அன்பாகவும் விசுவாசத்துடனும் ஒப்புக்கொடுப்போம் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றுவார்.

தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன், தேவன் மரித்தோரிலிருந்து இயேசுவை எழுப்பினார் என்பதை நம் மனதுக்கு கொண்டு வருகிறார். தேவன் எதற்காக இப்படி எழுதும்படி பவுலலை ஏவினார்.

பதிமூன்றாம் வசனத்தில் தேவன் சொல்வதை கவனியுங்கள் ஞானஸ்நானத்திற்கு முன்பு, நாம் ஆவிக்குரிய பிரகாரமாக நம்முடைய அக்கிரமங்களில் மரித்திருந்தோம். ஆனால், இயேசுவுடனே கூட தண்ணீர் ஞானஸ்நானத்தில் உயிர்ப்பிக்கப்படுகிறோம். நாம் தண்ணீரில் மூழ்குவதற்கு முன்பு ஆவிக்குரிய பிரகாரமாக மரித்திருக்கிறோம். ஆனால் தேவனுடைய் வழியில் நாம் முழுகி ஞானஸ்நானம் பெறும்போது, நாம் கிறிஸ்துவுடனே கூட இணைக்கப்படுகிறோம். தேவன் நமக்கு புதிய ஆவிக்குரிய வாழ்வைக் கொடுக்கிறார்.

எதற்காக தேவன் அதைச் செய்கிறார்? ஞானஸ்நானத்தில் நம்முடைய கடந்த கால மீறுதல்களை அவர் கிருபையாய் மன்னிக்கிறார். உண்மையாக, அன்பாக தேவனுடைய கட்டளையான முழுக்கு ஸ்நானத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது ஏவ்வளவு பெரிய ஆசீர்வாதம்? தேவன் நம்முடைய கடந்த கால பாவங்களை மன்னிக்கிறார். நமக்கு ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்வைக் கொடுக்கிறார்.

1பேதுரு 3:20,21 வசனங்கள், நோவாவின் நாட்களைப்பற்றிப் பேசுகிறது. எட்டு ஆத்துமாக்கள் தண்ணீர் மூலமாக இரட்சிக்கப்பட்டார்கள் என்று தேவன் சொல்கிறார். அதாவது, நோவாவும் அவருடைய குடும்பமும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பேழையைக்கட்டினார்கள். அதனால், மனிதகுலம் முழுவதையும் அழிக்க தேவன் அனுப்பின ஜலப்பிரளயத்திலிருந்து அவர் இரட்சிக்கப்பட்டார்கள்.

பின்பு 21-ஆம் வசனத்தில், தேவன் ஆவிக்குரிய பயன்பாட்டின் உண்மையை விளக்குகிறார். தேவன் ஆவிக்குரிய இரட்சிப்பை தெளிவாகக் குறிப்பிடும்போது ஏதோ ஒன்று இப்போது நம்மை இரட்சிக்கிறது என்று தேவன் சொல்கிறார். இப்போது நம்மை இரட்சிக்கிறது என்று தேவன் எதைப் பற்றி சொன்னார்? ஆம் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது. மனிதன், ஆரம்ப முதல் ஞானஸ்நானத்துக்கு முன்பே இரட்சிக்கப்படுகிறான் என்று சொல்லிக்கொள்கிறான் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி செய்யும்போது அவர்கள் தேவனோடு முரண்படுகிறார்கள்.

மேலும் ஞானஸ்நானம் தேவனுக்கு முன்பாக ஒரு தெளிவான மனசாட்சியைக் கொடுக்கிறது. அதுமாத்திரமல்ல, ஞானஸ்நானத்தில் தான் தேவன் நம்முடைய கடந்தகால அக்கிரமங்களை, அத்துமீறல்களை மன்னிக்கிறார்.

கீழ்க்காணும் வசனங்களில் ஞானஸ்நானத்தோடு, அதாவது தண்ணீரில் முழுகுதலோடு என்னத்தை இணைக்கிறார் என்பதை நாம் சுருக்கமாகப் பார்ப்போம். மாற்கு 16:16- இரட்சிக்கப்படுவதற்கு; அப் 2:38 கடந்த கால பாவங்களிலிருந்து பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு, அப் 8:39 சந்தோஷப்படுவதற்கு ; அப் 10:47; 11:14 இரட்சிக்கப்படுவதற்கு அப் 16:34- மனமகிழ்ச்சியாயிருப்பதற்கு; அப் 18:8 1கொரி 15:1-4 இரட்சிக்கப்படுவதற்கு; அப் 19:5 எபே 1:7 மீட்கப்படுவதற்கும், பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும்; அப் 22:16 நம்முடைய பாவங்கள் கழுவப்படுவதற்கு; ரோம 6:17,18 கடந்த கால பாவங்களிலிருந்து விடுதலைப் பெறுவதற்கும், நீதிக்கு அடிமைகளாவதற்கும்; 1 கொரி 12:13 ஒரே சரீரத்தில் கிறிஸ்துவின் சபையில் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு; கலா 3:26,27 தேவனுடைய பிள்ளையாவதற்கும், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்புடுவதற்கும், அவரைத் தரித்துக் கொள்வதற்கும் கொலோ 2:12,13- கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்படுவதற்கும் எழுப்பப்டுவதற்கும் தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே நம்மை உயிர்ப்பிப்பதற்கும் நம்முடைய கடந்த கால மீறுதல்கள் மன்னிக்கப்படுவதற்கும்; 1 பேதுரு 3:21 இரட்சிக்கப்படுவதற்கும்,

தேவனுக்கு முன்பாக நல்மனசாட்சியை உடையவர்களாயிருப்பதற்கும். இப்போது இந்த வசனங்களையெல்லாம் மனதில் கொண்டு தேவனுடைய, பார்வையில் ஞானஸ்நானம் விருப்பமானதா? அல்லது அவசியமானதா? என்பதை நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டும். ஞானஸ்நானம் மிக அவசியமானது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

பிரியமானவர்களே நீங்கள் இதற்கு முன் இயேசுவை விசுவாசித்து அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்று உங்களுக்கு யாராவது போதித்திருந்தால் அதை நீங்கள் விசுவாசித்து தவறான ஞானஸ்நானம் பெற்றிருந்தால் நீங்கள் வசனங்களில் பார்த்தபடி நீ சரியான ஞானஸ்நானம் அதாவது முழுக்கு ஸ்நானம் பெற வேண்டும். அதை நீங்கள் இன்றே செய்வீர்களா? அதற்கென உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அடுத்த மாதம் ஞானஸ்நானம் பெற்றபிறகு நாம் பாவம் செய்தால் என்ன நடக்கும்? என்பதை கேள்வியாகக் கேட்டு அதற்கு பதிலும் சொல்ல விரும்புகிறோம்.

**BENNY** **CHARLIE DIPALMA**

## ரோமர் நிருபத்தில் தேவனுடைய குணாதிசயங்கள்

1. *ரோமர் 5:8-ல் தேவன் அன்புள்ளவர்*
2. *ரேமார் 9:15 -ல் தேவன் இரக்கமுள்ளவர்*
3. *ரோமர் 11:22-ல் தேவன் தயவும், கண்டிப்பும் உள்ளவர்*
4. *ரோமர் 15:6-ல் தேவன் பொறுமையையும், ஆறுதலையும் அளிக்கிறார்.*
5. *ரோமர் 2:4-ல் தேவன் பொறுமையும் நீடிய சாந்தமும் உடையவர்*

## வேதம் அழைக்கும் பிதா

**a) இரக்கங்களின் பிதா - 1 கொரி 1:3**
**b) ஆவிகளின் பிதா - எபிரெ. 12:9**
**c) சோதிகளின் பிதா - யாக் 1:17**
**d) நீதியுள்ள பிதா - யோவான் 17:25**
**e) பரிசுத்த பிதா - யோவான் 17:11**

# இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும், மரித்தாலும் இனி சதா காலமும் உயிரோடு இருக்கிற இயேசு கிறிஸ்துவின் கிருபையுள்ள நாமத்திலே அன்புடன் வாழ்த்துகிறேன்.

## சரீரப்பிரகாரமான இருதயம்

நம் சரீரத்தில் உள்ள இருதயம் மருத்துவத்தில் ஆரிக்கிள்ஸ், என்றும் வென்ட்ரிக்கள்ஸ் என்றும் பிரிக்கப்பட்டு சிரை, தமனி என்ற இரத்தநாளங்கள் வழியே நாள் முழுவதும் நம் உடலுக்குத் தேவையான இரத்தம் இங்கு இருந்தே சுத்திகரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. இந்த நமது இருதயத்தை நம்மால் சுத்தப்படுத்த அவசியமில்லாத படிதான் தேவன் சிருஷ்டித்திருக்கிறார். சரீரத்தில் மற்ற பகுதிகளைத் தாக்கும் சில முக்கியமான வியாதிகள் இருதயத்தை தாக்குவது இல்லையே ஏன் என்று மருத்துவ உலகம் வியந்து கொண்டு இருக்கிறது. "தாவீதும் நான் பிரமிக்க தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறேன் என்றான்" (சங். 139) இந்த மாம்ச இருதயம் நம் சரீரத்தை இயக்க உதவும் ஒரு பகுதி. நம் சிந்தனை சக்திக்கும் இந்த இருதயத்திற்கும் சம்பந்தமில்லை. ஆனால் பரிசுத்த வேதாகமம் (எரேமியா 17:9) "இருதயம் மகா கேடும் திருக்கும் நிறைந்தது என்றுரைக்கிறது" அப்படி என்றால் அந்த இருதயம் எது?

## 1. தேவன் உருவாக்கிய ஆவிக்குரிய இருதயம்

(ஆதி 2:7) "தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" இந்த ஜீவ ஆத்துமாதான் உள்ளான மனிதன். இதை பவுல் (II கொரி 4:16) உள்ளான மனிதன் என்று சொல்கிறார். இந்த உள்ளான மனிதன் என்றும் அழிவது இல்லை. உதாரணம் லாசரு, ஐசுவரியவானின் சம்பவம் (லூக்கா 16:19-26) சிந்திக்கின்ற, திட்டமிடுகின்ற, நன்மை தீமை பகுத்தறிகிற உள்ளான மனிதனைதான் வேதாகமம் இருதயம் என்கிறது. இந்த இருதயம் தான் சுத்தமாயிருக்க வேண்டும் என்கிறது.

## A. இருதயம் ஏன் சுத்தமாயிருக்க வேண்டும்?

ஏனென்றால் நாம் தேவனுடைய பிரசன்னத்தை நம் இருதயத்திலே தரிசிக்க வேண்டும். சாலமோன் கட்டிய எருசலேம் தேவாலயத்தில் அவர் வாசமாயில்லை. மாறாக "நீங்களே அந்த ஆலயம்" (1 கொரி 3:16,17) என்கிறார். மனித இருதயம் படைக்கப்பட்டபோது செம்மையானதாக இருந்தது. (பிரசங்கி 7:29) பிசாசின் தந்திரத்திற்கு கீழ்ப்படிந்த உடனே நமக்கு தீமை வந்தது (ஆதி 3:1-24) தேவனோடு ஆதாமும் ஏவாளும் மிகவும் சந்தோஷமாக தினமும் சம்பாஷித்து வந்தனர். ஆனால் பிசாசு ஏதோ தேவனை விட அதிக நன்மைகளை அவர்களுக்கு செய்வது போல பேசி விலக்கப்பட்ட கனியை அவர்களை புசிக்க வைத்து, தேவனுடைய சமூகத்தில் இருந்தும், மகிழ்ச்சியான ஏதேன் தோட்டத்திலிருந்தும் விரட்டியடிக்கும்படி செய்து விட்டான். இதுதான் பிசாசு செய்த நன்மை. நாம் பிசாசின் அதிகாரத்திற்கு நீங்கலாக வேண்டும்.

## 2. பிசாசின் அதிகாரம் என்ன?

(யோவான் 14:30) பிசாசு உலகத்தின் அதிபதி (எபே 2:2) ஆகாய அதிகார பிரபு (1பேது 4:4) துன்மார்க்க உளைக்குச் சொந்தக்காரன். (II கொரி 4:4) சுவிசேஷம் மக்களின் இருதயத்திற்குள் சென்றுவிடாதபடி தடுக்கும் இப்பிரபஞ்சத்தின் தேவன் 1 யோவா 5:19 இந்த உலகம் முழுவதும் தன் கட்டுப்பாட்டில் வைத்து பாவத்தில் மூழ்க வைக்கும் அதிகாரி

கரையான் கட்டின புற்றில் பாம்பு குடியேறுவதைப்போல தேவன் படைத்த உலகில் பிசாசு அநேகரின் இருதயங்களைக் கெடுத்து வைத்திருக்கின்றான். அடிமை வேலை செய்வோர் முதல் ஆட்சி பீடத்தில் இருப்போரின் இருதயம் வரை அவனால் செல்ல முடியும்.


1 (அப் 5:1-10) அனனியா சப்பீராள் என்ற அருமையான தம்பதியருக்குள் பிசாசு புகுந்து பண ஆசையால் பேதுருவிடம் பொய் சொல்ல வைத்து அவ்விருவரின் சாவுக்கும் வழிவகுத்தான்.

2 (யோவா 13:2) யூதாஸிற்குள் பண ஆசையைக் கொண்டு வந்து இயேசுவை காட்டிக் கொடுக்க வைத்தான் (மத் 27:1-5) முடிவில் அவன் தற்கொலை செய்து மாண்டான்.

3 பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் பெருமை கொள்ளத் தூண்டி (தானி 4:29-33) தேவன் அவனை ராஜ்ஜியபாரத்தில் இருந்து தள்ளி, ஒரு மிருகத்தைப் போலாக அவன் ஒரு கருவியாக இருந்தான். நம் கவலை எல்லாம் என்னவென்றால் நமக்கும் அவன் இப்படி செய்து விடக்கூடாதே என்பதுதான்.

**S. PITCHAIMUTHU**
தூத்துக்குடி.

**தொடரும் ...**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K.Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

# ஓர் இனிய செய்தி


**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட**
ஓர் இலவச பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**



# ராஜ் டிவி யில்


## திருமறை தியானம்

**பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணி**

# தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்

**பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி**



Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.

Design by: Sun, Kgm. Ph: 222555